**<u>சுருக்கம்</u>**

நிதி பேரூராட்சிகள் இயக்ககம் – 2009–2010ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை ரூ.8,06,09,000/– (ரூபாய் எட்டு கோடியே ஆறு இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்) பேரூராட்சிகளுக்கு விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை</u>**

அரசாணை (ப) எண். 124 நாள்: 23.03.2010

9, பங்குனி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை எண்.199, நிதி (FCIV) துறை, நாள் 25.05.2007.
2. அரசாணை (ப) எண். 112, ந.நி.(ம)கு.வ.(பொது) துறை, நாள் 14.03.2008.
3. அரசாணை (நிலை) எண். 52, ந.நி.(ம)கு.வ.(நநி.2) துறை, நாள் 27.03.2008.
4. அரசாணை (ப) எண். 104, ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 18.03.2009.
5. நிதித்துறை அ.சா.கு.எண்.60945/நிதி(ந.நி.(ம)கு.வ.) நாள் 11.02.2010.
6. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித எண். 19332/09/ஈ1, நாள் 14.10.2009 மற்றும் 26.12.2009.

*****

**<u>ஆணை:</u>**

2007–2008ம் ஆண்டிற்கான நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்ட மதிப்பீட்டில், பேரூராட்சிகளின் துறைக்கு மூன்றாம் மாநில நிதி ஆணைய பரிந்துரையின்படி, இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையாக (Contribution to the Operational and Maintenance Gap Filling Fund) ரூ.6,67,20,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில், பேரூராட்சி ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.5.61 கோடி தொகையை மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவித்தும் மீதமுள்ள தொகை ரூ.1,06,20,000/–ஐ நிதிப்பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளை தேர்வு செய்து விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2008–2009–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.7,20,90,000/–ல் ரூ.5,61,00,000/–ஐ பேரூராட்சிகளில் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை முன்னுரிமை மற்றும் தேவை அடிப்படையில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும், மீதமுள்ள ரூ.1,59,90,000/–யை முன்னுரிமை அடிப்படையில் பேரூராட்சிகளில் குடிநீர் கட்டணம்,

தெருவிளக்குகள், சாலைகள், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

**3. 2009–2010**ம் ஆண்டிற்கான நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்ட மதிப்பீட்டில், பேரூராட்சிகளின் துறைக்கு மூன்றாம் மாநில நிதி ஆணைய பரிந்துரையின்படி, இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையாக (Contribution to the Operational and Maintenance Gap Filling Fund) ரூ.**8,67,44,000/–** ஒதுக்கீடு செய்யப்பட்டது. **2009–2010**ம் ஆண்டு இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்படி ரூ.**8,67,44,000/–**ல் அடிப்படை கட்டமைப்பு, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான நிதி ஒப்பளிப்புக் குழுவின் **18.01.2010** அன்று நடைபெற்ற கூட்டத்தில் அளிக்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், பேரூராட்சிகளில் இயக்க மற்றும் பராமரிப்பு பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ள சில அத்தியாவசியமான பணிகள் செய்யப்பட வேண்டி உள்ளதால், இணைப்பில் கண்டுள்ள அத்தகைய அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ரூ.**5,61,00,000/–** (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்தியோரு இலட்சம் மட்டும்)ஐ விடுவிக்கும்படியும், மீதமுள்ள தொகை ரூ.**3,06,44,000/–** (ரூபாய் மூன்று கோடியே ஆறு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் மட்டும்)க்கு நிதிப்பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளை தேர்வு செய்து மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்த தொகை விடுவிக்கவும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கும்படியும் மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**4.** மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட நிதித்துறையின் **2009–10**ம் ஆண்டிற்கான திருத்திய திட்ட மதிப்பீட்டின்படி, பேரூராட்சிகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.**8,06,09,000/–** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** பார்வை **3–**ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட குழுவின் ஒப்புதலின் அடிப்படையில், பேரூராட்சிகளின் இயக்குநரின் திருத்திய கருத்துருவை அரசு பரிசீலித்து, **2009–2010**ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டில் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.**8,06,09,000/–** (ரூபாய் எட்டு கோடியே ஆறு இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)–ஐ பெற்று பேரூராட்சிகளில் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இணைப்பில் தெரிவித்துள்ளவாறு ரூ.**5.61** கோடி ஒதுக்கீடு செய்திடவும், மீதமுள்ள தொகை ரூ.**2,45,09,000/–** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்திஐந்து இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)க்கு நிதிப்பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளை தேர்வு செய்து மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்த தொகை விடுவிக்கவும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலும், இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "**3604–00** உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் – **193** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி **–1** – திட்டத்தில் சேராதது – AD- இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை – **09** உதவித்தொகை – **02** மூலதன செலவுக்கான உதவித்தொகை " (DPC 3604-00-193-AD-0921).

**7.** மேலே பத்தி **5–**ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ரொக்கமாக விடுவிக்காமல் தன்வைப்புக் கணக்கில் (P.D.Account) பற்று வைக்க ஏதுவாக கணக்கு எண்ணிட்டு தமிழ்நாடு நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதி (Tamil Nadu Urban Infrastructure Development and Renewal Fund) என்ற பெயருக்கு காசோலை / வரைவோலையாகவோ பெற்று வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** பேரூராட்சிகளுக்கு **2009–2010**ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.**8,67,44,000/–**ஐ திருத்திய மதிப்பீட்டில் ரூ.**8,06,09,000/–** ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அவ்விவரத்தை அடிப்படை கட்டமைப்பு, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பளிப்புக் குழுவின் கவனத்திற்கு தவறாமல் கொண்டு செல்லும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். **12045**/Fin(MAWS)/2010 நாள் **19.3.2010–**ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை **– 108. (இ).**
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை **– 1. (இ).**
மாநில கணக்காயர், சென்னை **– 18. (இ).**
நகல்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை,
குறளகம், சென்னை **108. (இ).**
ஐ.(ம)கு.வ.(அந.**2**) துறை, சென்னை **–9(இ).**
நிதி (ஐ.(ம)கு.வ. / நிதிக்குழு.**4**/வழிவகை.I) துறை,
சென்னை **–9(இ).**
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள். **(இ).**
உதிரி/நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

**பிரிவு அலுவலர்.**

**<u>அரசாணை (ப) எண்.124, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.3.2010</u>**

**<u>இணைப்பு</u>**

**2009–10 ஆண்டிற்கான இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை**

**(ரூ.லட்சத்தில்)**

| வ. எண் | மாவட்ட பெயர் | பேரூராட்சியின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | நந்திவரம் கூடுவாஞ்சேரி | பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்தல் | 50.00 | 25.00 |
| 2 | | சிட்லப்பாக்கம் | நவீன எரிவாயு தகன மேடையை மேம்படுத்துதல் | 45.00 | 25.00 |
| 3 | திருவள்ளூர் | போரூர் | குடிநீர் பகிர்ந்தளித்தல் திட்ட மேம்பாடு | 10.00 | 6.00 |
| 4 | திருவண்ணாமலை | சேத்துப்பட்டு | தலைமை குடிநீரேற்ற நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் | 25.00 | 15.00 |
| 5 | சேலம் | வாழப்பாடி | துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 28.75 | 18.00 |
| 6 | | மோகனூர் | துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 51.75 | 30.00 |
| 7 | | கொளத்தூர் | குடிநீர் திட்டத்தினை மேம்படுத்துதல் | 12.50 | 8.00 |
| 8 | | சங்ககிரி | குடிநீர் திட்டத்தினை மேம்படுத்துதல் | 23.35 | 15.00 |
| 9 | | நாமகிரிபேட்டை | 1 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 6.95 | 5.00 |
| 10 | கிருஷ்ணகிரி | தேன்கனி கோட்டை | பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்தல் | 50.00 | 35.00 |
| 11 | கோயம்புத்தூர் | வேடப்பட்டி | அஜ்ஜனூர் ரோடு முதல் தொண்டாமுத்தூர் மெயின் ரோடு முதல் ஸ்ரீநகர் இணைப்பு மருதமலை முருகன் கோவில் முதல் பேரூர் பட்டீஸ்வரர் கோயில் வரை தார்ச்சாலை அமைத்தல் | 12.00 | 7.00 |
| 12 | | வீரகேரளம் | அஜ்ஜனூர் ரோடு முதல் காயத்திரி நகர் முதல் சிறுவாணி ரோடு இணைப்பு மருதமலை முருகன் கோவில் முதல் பேரூர் பட்டீஸ்வரர் கோயில் வரை தார்ச்சாலை அமைத்தல் | 20.00 | 10.00 |
| 13 | | பெரிய நாயக்கன்பாளையம் | 3வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் பூங்கா அமைத்தல். | 10.00 | 7.00 |
| 14 | | துடியலூர் | நவீன எரிவாயு தகன மேடையை மேம்படுத்துதல் | 24.00 | 12.00 |
| 15 | | சூலூர் | நவீன எரிவாயு தகன மேடையை மேம்படுத்துதல் | 22.00 | 12.00 |
| 16 | தஞ்சாவூர் | வல்லம் | பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் மற்றும் மேம்பாடு பணிகள் செய்தல் | 15.00 | 10.00 |
| 17 | | பாபநாசம் | பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் சிமிண்ட் தளம் மற்றும் கழிப்பிடம் கட்டுதல் | 40.00 | 25.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | | தாராசுரம் | பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்டுதல் | 10.00 | 5.00 |
| 19 | | சுவாமிமலை | பேரூராட்சியின் பேருந்து நிலையத்தின் அருகில் கழிப்பிடம் கட்டுதல் | 10.00 | 7.00 |
| 20 | திருவாரூர் | நன்னிலம் | பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 20.00 | 10.00 |
| 21 | திருப்பூர் | முத்தூர் | 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் மாற்றுதல் | 6.50 | 5.00 |
| 22 | | மூலனூர் | 200000 லிட்டர் தரைமட்ட தொட்டி மற்றும் பம்ப் ரூம் கட்டுதல் | 10.00 | 7.00 |
| 23 | | அவிநாசி | பேருந்து நிலைய மேம்பாடு | 20.00 | 12.00 |
| 24 | | திருமுருகன்பூண்டி | 300000 லிட்டர் தரைமட்ட தொட்டி கட்டுதல் மற்றும் மோட்டார் சீர் செய்தல் | 15.00 | 10.00 |
| 25 | | திருமுருகன்பூண்டி | பூங்கா மேம்பாடு ( ஐஸ்வர்யா நகர் ) | 15.00 | 10.00 |
| 26 | ஈரோடு | சித்தோடு | 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் அபிவிருத்தி | 10.00 | 7.00 |
| 27 | | அரியப்பம்பாளையம் | பைப்லைன் புதிதாக மாற்றுதல் | 7.50 | 5.00 |
| 28 | | கொல்லங்கோயில் | 100000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் அபிவிருத்தி | 7.75 | 5.00 |
| 29 | | வெள்ளோட்டபரப்பு | பெரியார் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி முதல் நடுபாளையம் வரை பைப்லைன் மாற்றுதல் | 4.00 | 3.00 |
| 30 | | ஆப்பகுடல் | ஆப்பகுடல் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி முதல் விஜயா காலனி வரை பைப்லைன் மாற்றுதல் | 4.00 | 3.00 |
| 31 | | பவானிசாகர் | தலைமை நீரேற்றம் நிலையம் முதல் இலங்கை அகதிகள் முகாம் வரை பைப்லைன் மாற்றுதல் | 5.00 | 3.00 |
| 32 | திண்டுக்கல் | ஆயக்குடி | தாளமதகு முதல் இரட்டை மருகால் வரை மெயின் பைப்லைன் மாற்றுதல் | 50.00 | 35.00 |
| 33 | விழுப்புரம் | மரக்காணம் | குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் | 30.00 | 20.00 |
| 34 | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மேம்பாடு செய்தல் | 10.00 | 7.00 |
| 35 | விருதுநகர் | காரியாபட்டி | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மேம்பாடு செய்தல் | 5.00 | 3.00 |
| 36 | சிவகங்கை | திருப்பத்தூர் | 45 H.P சப்மெர்சிபிள் மோட்டார் வாங்குதல் | 2.00 | 2.00 |
| 37 | தேனி | உத்தமபாளையம் | வார்டு எண் 5ல் 100000 கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டி கட்டுதல் | 28.50 | 20.00 |
| 38 | | தென்கரை | புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி முதல் ஆர்.டி.யூ.காலனி வார்டு எண்.7,8 மற்றும் 9 முடிய பைப்லைன் அமைத்தல். | 27.60 | 20.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | | ஓடைப்பட்டி | வெள்ளையம்மாள்புரம் நெடுஞ்சாலை முதல் ஓடைப்பட்டி பேரூராட்சி முடிய தார்ச்சாலை அமைத்தல். | 19.50 | 12.00 |
| 40 | மதுரை | பாலமேடு | பேருந்து நிலையத்தில் சிமிண்ட் சாலை மற்றும் பேருந்து நிலைய சுற்றுச்சுவர் கட்டுதல். | 10.00 | 7.00 |
| 41 | | டி.கல்லுப்பட்டி | ஏற்கனவே உருவாக்கப்பட்ட நீராதாரத்திலிருந்து 2500 மீ நீளத்திற்கு பிரதான குழாய் அமைத்து மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு இணைப்பு செய்தல். | 30.00 | 20.00 |
| 42 | திருநெல்வேலி | சுரண்டை | 200000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு | 26.00 | 16.00 |
| 43 | | ஆய்க்குடி | 200000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு | 19.00 | 10.00 |
| 44 | | சாம்பவர் வடகரை | பழைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு பிரதான குழாய் அமைத்தல் | 13.50 | 9.00 |
| 45 | கன்னியாகுமரி | வில்லுக்குறி | குடிநீர் திட்ட அபிவிருத்தி | 19.50 | 10.00 |
| 46 | | மணவாளக்குறிச்சி | குடிநீர் திட்ட அபிவிருத்தி | 5.00 | 5.00 |
| 47 | | தெங்கம்புதூர் | குடிநீர் திட்ட அபிவிருத்தி | 15.00 | 8.00 |
| **மொத்தம்** | | | | **901.65** | **561.00** |

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்.**

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்.